நகர் ஊரமைப்பு இயக்குநர் அலுவலகம்,
807, அண்ணா சாலை, சென்னை – 600 002.

ந.க.எண்.4367/2019–நஊ2

நாள்: 31.10.2019

**சுற்றறிக்கை**

பொருள்: திட்ட அனுமதி வழங்குதல் – கட்டிட அனுமதி வழங்க கள அலுவலர்களுக்கு அதிகாரப் பகிர்வு வழங்கிய சுற்றறிக்கையில் திருத்தம் செய்து ஆணை வழங்கப்படுகிறது – சம்பந்தமாக.

பார்வை: 1) இவ்வலுவலக சுற்றறிக்கை இதே எண் நாள்: 7.3.2019.
2) இவ்வலுவலக சுற்றறிக்கை இதே எண் நாள்:14.10.2019.
3) இவ்வலுவலக சுற்றறிக்கை இதே எண் நாள்: 18.10.2019 (ம) 25.10.2019.

----

பார்வை 2 மற்றும் 3–ல் காண் சுற்றறிக்கைகளில் பார்வை 1–ல் சுட்டிய சுற்றறிக்கைக்கு திருத்தங்கள் வெளியிடப்பட்டன. அவற்றைத் தொடர்ந்து கீழ்கண்டவாறு மேலும் திருத்தம் செய்து ஆணையிடப்படுகிறது:

பார்வை 1–ல் சுட்டிய சுற்றறிக்கையின் பத்தி எண் (a)–ல் கீழ்காண் வரியைச் சேர்த்துப் படிக்கப்பட வேண்டும்:

"தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் மற்றும் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் ஆகியவற்றின் கட்டிட உத்தேச விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் 18.3மீ உயரத்திற்கு மிகும் அதிக உயர கட்டிடம் (High rise building) உத்தேசம் தவிர இதர அனைத்து வகைக் கட்டிடங்களுக்கும் FSI பரப்பளவு கட்டுபாடின்றி கள அலுவலர் அளவிலேயே விதிகளுக்குட்பட்டு திட்ட அனுமதி வழங்கப்படலாம்".

இச்சுற்றறிக்கை உடனடியாக அமலுக்கு வருகிறது. அலுவலர்கள் இச்சுற்றறிக்கையை பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகைச் சான்றினை மறுதபாலில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

(ஒம்./–) சந்திர சேகர் சாகமூரி,
நகர் ஊரமைப்பு இயக்குநர்

பெறுநர்
உறுப்பினர் செயலர்கள், அனைத்து கூட்டு உள்ளூர் திட்டக் குழுமங்கள் மற்றும் புதுநகர் வளர்ச்சிக் குழுமங்கள் (ம) அனைத்து மண்டல துணை இயக்குநர்கள்/ உதவி இயக்குநர்கள்

நகல்:
1) அரசு முதன்மை செயலர், வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை, சென்னை–9.
2) மாண்புமிகு துணை முதலமைச்சரின் மூத்த சிறப்பு நேர்முக உதவியாளர்
3) தலைமை அலுவலகத்தின் அனைத்து துணை இயக்குநர்கள், உதவி இயக்குநர்கள், துணை இயக்குநர்(நிர்வாகம்), ஆராய்ச்சி அலுவலர், கணக்கு அலுவலர், உதவி கணக்கு அலுவலர், அனைத்து திட்ட உதவியாளர்கள், மேற்பார்வையாளர்கள் மற்றும் ஆராய்ச்சி உதவியாளர்கள்.
4) நகர் ஊரமைப்பு இயக்குநரின் சுருக்கெழுத்து தட்டச்சர்.

/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/

31/10/19
துணை இயக்குநர்

Verified RealEstate ™